# பெண்களுக்கான வலுவூட்டலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும்

**நன்றிகள்**

WIFI பயிற்சி மொடியூல்களை உருவாக்கிய அபிவிருத்திக்கான ஆசிய, பசுபிக் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்திற்கு (Asian and Pacific Training Centre for Information and Communication Technology for Development - UN-APCICT) விசேடமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்; இந்த மொடியூல்களே இவ் ஆவணத்திற்கான அடிப்படையாக அமைந்தன. APCICT நிலையம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார, சமூக ஆணைக்குழுவின் (Economic and Social Commission for Asia and the Pacific - ESCAP) பிராந்திய நிறுவனமொன்றாகும். இந்தப் பயிற்சிக் கைநூல், வியாபாரங்களைத் திட்டமிடுவதிலும் முகாமை செய்வதிலும் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பிரயோகிப்பதற்கான ஆற்றலை விருத்தி செய்வதன் மூலம் பெண்களின் முயற்சியாண்மைக்கு உதவும் நோக்கில் சுஹுருளிய (Suhuruliya) என்ற பெயரில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் Women and ICT Frontier Initiative (WIFI) நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகும்.

## உள்ளடக்கம்

1. அபிவிருத்தியில் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் .......... 5

2. பெண்களுக்குத் தொழில்நுட்ப அறிவு இல்லையா? .......... 5

2.1 பெண்களின் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பப் பயன்பாட்டுகள் தடையாக உள்ள காரணிகள் எவை? .......... 7

3. பெண்களுக்கான வலுவூட்டல் .......... 8

3.1 பயனுறுதி வாய்ந்த வலுவூட்டல் பெண்களின் வாழ்வில் பல்வேறுபட்ட சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும். அது பெண்களுக்குப் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும்: .......... 10

3.2 மகளிர் வலுவூட்டலில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்த முடியும் .......... 10

3.3 மகளிர் வலுவூட்டலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும் .......... 12

3.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 5 – பால் சமத்துவத்தை அடைதலும் அனைத்துப் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் வலுவூட்டதலும் .......... 13

4.0 முயற்சியாண்மை என்றால் என்ன? .......... 14

4.1 தொழில்முயற்சியாளர் என்பவர் யார்? .......... 15

4.2 வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களின் இயல்புகள்: .......... 16

4.3 இலங்கையிலுள்ள வெற்றிகரமான பெண் தொழில்முயற்சியாளர்கள் .......... 16

4.3.1 ஆடைக் கைத்தொழில் துறையிலுள்ள பெண் தொழில்முயற்சியாளர்கள் .......... 17

4.3.1 சமையல் தொழில் துறையிலுள்ள பெண் தொழில்முயற்சியாளர்கள் .......... 18

5.0 முயற்சியாண்மையின் நன்மைகள் .......... 20

5.1 பெண்களுக்கான பொருளாதார வலுவூட்டல் மற்றும் முயற்சியாண்மை .......... 20

5.2 பெண்களின் முயற்சியாண்மைமையும் சமுதாயமும் .......... 20

5.3 முயற்சியாண்மை தலைமைத்துவத்தை ஊக்குவிக்கும் .......... 22

6.0 முயற்சியாண்மைக்கு தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் எவ்வாறு உதவ முடியும். 23

6.1 நிதிக்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப அணுகல் .......... 23

6.1.1 கையடக்க வங்கிச் சேவை .......... 23

6.1.2 சமுதாய நிதிசேகரிப்பு .......... 24

6.2. வியாபாரத் தொடர்பாடலுக்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் .......... 24

7.0 பெண்களின் வலுவூட்டலுக்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப வாய்ப்புக்கள் ............ 25

8.0 பெண்கள் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்பாடுபடுத்துவதிலுள்ள சவால்கள் ............ 26

9.0 சவால்களை வெற்றிகொள்வதில் பெண்களுக்கான இணையவழிப் பாதுகாப்பு ............ 28

10.0 பெண்களுக்கு வசதி ஏற்பாடுகள் செய்து கொடுப்பதற்கான கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தற் சூழல் ............ 30

10.1 கொள்கை இலக்குகளை முன்னுரிமைப்படுத்துதலும் உருவாக்குதலும் ............ 31

10.2 பால்-நட்புறவான பொதுக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு ............ 32

11.0 உசாத்துணைகள் ............ 34

## 1. அபிவிருத்தியில் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்

கடந்த தசாப்தங்களில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் பாரியளவிலான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளதாகக் கருதப்படுகின்றது. இத்தொழில்நுட்பப் புரட்சியின் காரணமாக, சமூக பொருளாதார, அரசியல் அபிவிருத்தியானது வினைத்திறனும் பயனுறுதியும் கொண்டதாக முன்னேற்றமடைந்துள்ளது. மேலும், தகவல், தொடர்பாடல், தொழில்நுட்பமானது அதிகளவிலான விடயப்பரப்புக்களில் ஒரு முக்கியமான அபிவிருத்திக் கருவியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அது சமுதாயங்கள் தகவல்களைப் பெறுவதற்கான அணுகல் வசதிகளை அதிகரிப்பதுடன் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புக்களையும் விரிவுபடுத்துகின்றது.

இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அனைத்திலும் அபிவிருத்தியைச் சாத்தியப்படுத்துவதில் தகவல், தொடர்பாடல், தொழில்நுட்பத்தின் பாரியளவிலான இயலுமைகளின் உந்துதலால் தான் அபிவிருத்திக்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவ் அபிவிருத்திச் செயற்திட்டங்களை நீண்ட நிலைத்திருக்கச் செய்ய வேண்டுமாயின், இச்செயற்திட்டங்களின் வடிவமைப்பாளர்கள் பாலினப் பங்கேற்புடன் கூடிய, அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தி தொடர்பில் விசேடமாகக் கவனம் செலுத்துவது அத்தியவசியமானதாகவுள்ளது.

## 2. பெண்களுக்குத் தொழில்நுட்ப அறிவு இல்லையா?

பாலினச் சமத்துவத்தை ஊக்குவித்து பெண்களுக்கு வலுவூட்டுவதற்கான ஒரு கருவியாக தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் அமைய முடியும் என்று அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளை, ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண்களில் மிகக் குறைந்த தொகையினரே தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அணுகிப் பயன்படுத்துகின்ற “பாலினப் பிளவு” நிலையொன்று காணப்படுகின்றமையும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இப்பாலினப் பிளவை நிவர்த்தி செய்வதற்கு விசேடமாக நடவடிக்கைகள் எடுக்கப்படாதவிடத்து, தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பமானது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் தற்போது நிலவும் சமனற்ற தன்மைகளை மேலும் மோசமாக்கி புதிய சமனற்ற தன்மைகளை உருவாக்கும் அபாய நிலை காணப்படுகின்றது.



e “நான் எனது மகன்மாரை நேசிக்கிறேன். எனது மகள் சிறந்த கல்வியைப் பெற வேண்டும் என்று விரும்புகின்றேன். அப்போது தான் எனது பரம்பினர் அனுபவிப்பவற்றை அவள் அனுபவிக்காதிருக்க முடியும்”

அத்துடன் தகவல் தொழில்நுட்பமானது பெண்களின் விசேடமான சூழ்நிலைகளுக்கான தீர்வுகளை வழங்கவில்லை என்றும் நம்பப்படுகின்றது.

பெண்கள் குறிப்பாக கிராமியப் பெண்கள் கையடக்கத் தொலைபேசிகள், கணினிகள் போன்ற தொடர்பாடல் சாதனங்களைச் சொந்தமாக வைத்திருப்பதற்கான சாத்தியங்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

மேலும், பெண்களின் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப அணுகல் மற்றும் பயன்பாடு. தொழில்நுட்ப உட்கட்டமைப்புப் பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்ட காரணிகளாலும் மட்டுப்படுத்தப்படுகின்றது. சமூக ரீதியாக உருவாக்கப்பட்டுள்ள பாலின வகிபாகங்களும் உறவுமுறைகளும், தகவல் சமுதாயத்தில் சமத்துவ அடிப்படையில் பங்கேற்பதற்கான ஆண்களதும் பெண்களதும் ஆற்றலைத் தீர்மானிப்பதில் முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளன.

இலங்கைச் சூழ்நிலையைக் கவனத்திற் கொண்டு நோக்குகையில் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கான அணுகலில் குறிப்பிடத்தக்க அளவில் பாலின டிஜிட்டல் பிளவு காணப்படுவதுடன் ஆண்களின் தகவல் தொழில்நுட்ப அறிவு, பெண்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை விட ஒப்பீட்டளவில் அதிகரித்துக் காணப்படுகின்றது.  இலங்கை உட்பட அதிகமான நாடுகளில், இணையத்தைப் பயன்படுத்தும் பெண்களின் எண்ணிக்கை, கல்விகற்ற நகரப்புற உயர் வகுப்பினரைச் சேர்ந்த ஒரு சிறு குழுவிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. இவ்வாறு அணுகலைக் கொண்டுள்ள குழுக்கள் மத்தியிலும், இணையம் மற்றும் ஈ-மெயிலுக்கான அணுகலைக் கொண்டுள்ள பெண்களின் எண்ணிக்கை ஆண்களைவிடக் குறைவாகவே காணப்படுகின்றது. இந்நிலை இணையம் மற்றும் ஈமெயிலுக்கு மாத்திரம் உரியதன்று. ஏனைய தொழில்நுட்ப முன்னேற்றங்கள், பெண்களை விட ஆண்களினாலேயே அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன.

## 2.1 பெண்களின் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பப் பயன்பாட்டுகள் தடையாக உள்ள காரணிகள் எவை?

- வறுமை
- வீட்டு முன்னுரிமைகள்
- கல்வியறிவின்மை
- மொழிரீதியான தடைகள்
- அணுகலுடன் தொடர்புடைய சவால்கள்
- தொடர்பற்ற பிரயோகங்கள் மற்றும் தொடர்புடைய உள்ளடக்கங்கள் காணப்படாமை
- இணையவழி/இணையத் தொடர்பிலா பாதிப்புக்கள்
- சமூக கலாசாரத் தடைகள்
- பயிற்சியின்மை
- நம்பிக்கையின்மை

பெண்கள் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலுள்ள தடைகளை வெற்றிகொள்வதற்கு, பெண்களுக்கு வலுவூட்டுதலை ஒரு அறிவுபூர்வமான தீர்வாகக் கருத முடியும். பெண்களுக்கு வலுவூட்டுவதற்கு, முயற்சியாண்மை மற்றும் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியாண்மை என்பவற்றை உபாயமாகப் பயன்படுத்த முடியும். பெண்கள் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்திலும் அதனுடன் தொடர்புடைய கருவிகளிலும் ஈடுபாடு காட்டும் போது, இணையத் தொடர்பிலா பாதிப்புக்கள் ஓரளவுக்கு குறைவடைவதற்கான சாத்தியங்களும் காணப்படுகின்றன.

உதாரணமாக: பெண் இணையத் தொழில்முயற்சியாளர்களும் இணையவழியில் வேலைசெய்யும் பெண்களும் தங்களைத் தவறாகப் பயன்படுத்தக் கூடிய தனிப்பட்ட ஆட்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்வதனால் பாதிப்புறுவதற்கான வாய்ப்பு குறைவடையும்.

மேலும், பெண்கள் மீது சுமத்தப்பட்டுள்ள தடைகளை இல்லாதொழிப்பதற்கு, பொருத்தமான கொள்கைகள் உருவாக்கப்படுவதும் முக்கியமானதாகும்.

### 3. பெண்களுக்கான வலுவூட்டல்

வலுவூட்டல் என்பதற்கு, தெரிவுகளை (வளங்களை) அதிகரிக்கின்றதும், ஒருவர் தனக்கும் பொதுவாக நோக்குகையில் சமூகத்திற்கும் பயனுள்ள தெரிவுகளைச் செய்வதற்கான ஆற்றலை மேம்படுத்தும் ஒரு மாற்றற் செயன்முறை என்று பொதுவாக வரைவிலக்கணம் கூறப்படுகின்றது.

பெண்களுக்கு வலுவூட்டல் என்பது அவர்கள் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் வாழ்வில் முழுமையாகப் பங்கேற்கக் கூடிய நிலையை உறுதிசெய்வதாகும்.

***"A woman is the full circle. Within her is the power to create, nurture and transform." —***
*Diane Mariechild*

*பெண் என்பவள் ஒரு முழுமையான வட்டம் போன்றவள். படைப்பதற்கான, ஊட்டமளிப்பதற்கான, மாற்றியமைப்பதற்கான ஆற்றல் அவளுக்குள் பொதிந்துள்ளது. – டியானி மேரிசைல்ட்*

தனிப்பட்ட ஆட்கள் தங்களுடைய வாழ்க்கையில் உபாயமுறைத் தெரிவுகளைச் செய்வதற்கான சிறப்பான ஆற்றலைப் பெறுகின்ற போது, அது அவர்களுடைய பொருளாதார, சமூக நல்வாழ்வில் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். வலுவூட்டப்பட்ட பெண்கள், அபிவிருத்தியடைந்த சமுதாயமொன்றின் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாக விளங்குவார்கள். உண்மையில், அபிவிருத்திக்கும் பெண்களின் வலுவூட்டலுக்கும் இடையில் இரு வழித் தொடர்பொன்று காணப்படுகின்றது. பெண்கள் சுகாதார பராமரிப்பு, கல்வி, வாழ்வாதாரம், அரசியல் பங்கேற்பு என்பவற்றுக்கான சிறந்த அணுகலைப் பெறுகின்ற போது, தாங்கள் அதிகம் வலுவூட்டப்பட்டிருப்பதாக அவர்கள் உணர்வார்கள். அதன் விளைவாக, அவர்கள் சமூக, பொருளாதார அபிவிருத்திக்குக்கு சிறப்பாகப் பங்களிப்புச் செய்யக்கூடிய ஆற்றலைப் பெறுவர்.





### 3.1 பயனுறுதி வாய்ந்த வலுவூட்டல் பெண்களின் வாழ்வில் பல்வேறுபட்ட சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும். அது பெண்களுக்குப் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கும்:

- வன்முறையிலிருந்து பாதுகாப்புப் பெறுதல்
- தங்களது பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமைகள் மீது கட்டுபாட்டைக் கொண்டிருத்தல்
- தங்களது கருத்துக்கள் கேட்கப்படுதல்
- சமூக மற்றும் பொருளாதார நகர்வு காணப்படுதல்
- நிதிச் சொத்துக்களைச் சொந்தமாக வைத்திருப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான ஆற்றல் காணப்படுதல்

### 3.2 மகளிர் வலுவூட்டலில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்த முடியும்

மகளிர் வலுவூட்டல் முயற்சிகளுக்கான வசதிகளை வழங்கக் கூடிய முக்கியமான உந்து சக்திகளில் ஒன்றாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் விளங்குகின்றது. புதிய தொழில்நுட்பத்தின் முன்னேற்றம், அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கையடக்கத் தொலைபேசிகளினதும் சமூக வலையமைப்புச் சேவைகளினதும் பரந்தளவிலான பயன்பாடு என்பவற்றைத் தொடர்ந்து, பெண்கள் தங்களது வாழ்வில் எதிர்நோக்குகின்ற தடைகளை வெற்றிகொண்டு ஆக்கத்திறனும் புத்தாக்க உணர்வும் கொண்டவர்களாக மாறுவதற்கு உதவும் முக்கியமான சாத்தியப்படுத்தற் காரணியாக தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் விளங்குகின்றது. மேலும், பெண்கள், குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கல்வி அறிவு குறைந்த, ஓரங்கட்டப்பட் குழுவாக



ஜயோமி லொகுலியன, இலங்கையின் கையடக்கத் தொலைபேசிச் சந்தைப்படுத்தல் தொழில்துறையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்திய, இலங்கையின் கையடக்கத் தொலைபேசிச் சந்தைப்படுத்தல் முன்னோடியான, zMessenger கம்பனியின் சம ஸ்தாபகரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமாவார்.

அவர் தனது கதையைக் கூறுகையில்,

"பத்து வருடங்களுக்கு முன்னர், நான் எனது தொழிலை விட்டு விலகி, நான் இப்போது திருமணம் செய்துள்ள எனது துணைவருடன் இணைந்து கொண்டேன். புதிய கம்பனியொன்றை ஆரம்பிக்க வேண்டும் என்பது அவருடைய கருத்தாக இருந்தது. ஆரம்பத்தில் சில வருடங்களாக கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டோம், கையடக்கத் தொலைபேசித் தொழில்நுட்பத் தீர்வுகளுக்கு நல்ல எதிர்காலம் இருப்பதை அறிந்திருந்ததனால் நாங்கள் அந்த இழப்புச் சாத்தியத்தை எதிர்கொள்ளத் தயாராக இருந்தோம். சந்தைப்படுத்தல் தொழிற்பாடுகள் அனைத்தையும் நான் கவனித்தேன்,

இருப்பதன் காரணமாக, அதன் மூலம் தகவல்களையும் அறிவையும் பெறுவதற்கான பெண்களின் அணுகலை மேம்படுத்தவும் முடியும், சாதனங்களை அல்லது புதிய தொழில்நுட்பத்தைச் சொந்தமாக வைத்திருப்பது இளம் பெண்களின் அந்தஸ்தையும் சக்தியையும் அதிகரிக்கச் செய்வதுடன் முன்மாதிரியான பெண்கள் என்ற வகையில் சமுதாயத்தில் வித்தியாசமான, முக்கிய வகிபாகங்களை நிறைவேற்றுவதையும் சாத்தியப்படுத்தும்.

### 3.3 மகளிர் வலுவூட்டலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும்

உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கை 2015 இற்கு இணங்க, 2006 ஆம் ஆண்டு தொடக்கம், கால் பில்லியன் பெண்கள் ஊழியப் படையில் இணைந்துள்ள போதிலும் பத்து வருடங்களுக்கு முன்பு ஆண்கள் உழைத்த தொகைக்குச் சமனான தொகையே தற்போது அவர்களுக்கான வருடாந்த ஊதியமாகச் செலுத்தப்படுகின்றது. வறுமைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு எந்தவொரு ஆளும் புறக்கணிக்கப்படாத விதத்தில் அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தியின் நிலைபேறான தன்மையை உருவாக்குவதற்கான அதிகாரங்களுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றன.

சட்டவாக்கம், சமூக மற்றும் கலாசார நெறிமுறைகளிலும் பொருளாதார மற்றும் அரசியல் நடைமுறைகளிலும் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளமையினால் பாலினச் சமத்துவத்திலும் வலுவூட்டலிலும் அர்ப்பணிப்புடன் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. நாடுகளின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டுவதையும், பெண்களுக்கான வலுவூட்டலை ஊக்குவித்து 2030 ஆம் ஆண்டில் பாலினச் சமத்துவத்தை அடைவதற்கான ஆரம்பப் புள்ளிகளை வழங்கும் நோக்கத்திற்காக இலக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதே நேரம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான உலகளாவிய உடன்படிக்கையானது, அனைத்து இலக்குகளுக்கும் ஏற்புடையதாகும் ஒரு கோட்பாடாக அனைவரையும் உள்ளடக்குவதை ஏற்றுள்ளது. அதனால் பெண்களுக்கான வலுவூட்டலானது முக்கியமான குறிக்கோள்களில் ஒன்றாகவும் ஒட்டுமொத்தத் தீர்வின் ஒரு முக்கியமான பகுதியாகவும் விளங்குகின்றது.

**3.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 5 – பால் சமத்துவத்தை அடைதலும் அனைத்துப் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் வலுவூட்டதலும்**

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளுக்கும் முடிவு கட்டுதல்

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் ஒழித்தல்

சிறுவர், இளவயது மற்றும் நிர்ப்பந்தத் திருமணங்கள் மற்றும் பெண் பிறப்புறுப்புச் சிதைப்பு என்பன போன்ற தீய நடைமுறைகளை முற்றாக ஒழித்தல்


சம்பளமற்ற பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைகளை அடையாளம் கண்டு பெறுமதி மதித்தல்

**நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 5**

பெண்களுக்கு பொருளாதார வளங்களையும் பெறுவதற்கான சம உரிமைகளையும் சொத்துரிமையைப் பெறுவதற்கான அணுகலையும் வழங்குவதற்கான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளுதல்

பெண்களுக்கான வலுவூட்டலை ஊக்குவிப்பதற்காகச் சாத்தியப்படுத்தும் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை மேம்படுத்துதல்

பால் சமத்துவத்தை ஊக்குவிப்பதற்கான சிறந்த கொள்கைகளையும் அமுலாக்க முடியுமான சட்டவாக்கங்களை உருவாக்கிப் பலப்படுத்துதல்




### 4.0 முயற்சியாண்மை என்றால் என்ன?

முயற்சியாண்மை என்பது, வியாபாரமொன்றை உருவாக்கி இலாபமீட்டும் விதத்தில் அதனை முகாமை செய்வதற்கான ஆற்றலையும் விருப்பத்தையும் குறிக்கின்ற ஒரு கூட்டு எண்ணக்கருவாகும். முயற்சியாண்மை என்பது நிதி ரீதியான மற்றும் சில போது, சமூக ரீதியான பயன்களைத் தரக்கூடிய இறுதி இலக்குடன் இணைந்த வகையில், இழப்புச் சாத்தியங்களை எதிர்கொள்ளுதல், வாய்ப்புக்கள் மற்றும் சவால்கள் தொடர்பான பாரியளவிலான காட்சியைப புரிந்து கொள்ளல், புதிய விடயங்களை உருவாக்குதல், சில பழைமையான எண்ணக்கருக்களை மீளக் கண்டுபிடித்தல் என்பவற்றைக் குறிக்கும். ஓரங்கட்டப்பட்டவர்களுக்கு வலுவூட்டி, எந்தவொரு நாட்டிலும் அல்லது பிராந்தியத்திலும் ஸ்திரத்தன்மையையும் செழிப்பையும் ஏற்படுத்துவதில், தனிநபர்களினதும் சமுதாயத்தினதும் அபிவிருத்திக்குச் சாதகமான முறையில் ங்களிப்புச் செய்யும் ஆற்றலை, முயற்சியாண்மை கொண்டுள்ளமையைச் சான்றுகள் நிரூபிக்கின்றன.



### 4.1 தொழில்முயற்சியாளர் என்பவர் யார்?

தொழில்முயற்சியாளர் என்பவர் மாற்றத்தை ஏற்படுத்துகின்ற முகவராவார். பொருளாதார, சமூக, அல்லது அரசியல் பெறுமானங்ளை உருவாக்கி அவ்வாறானவற்றை உருவாக்குவதற்காக புதிய அமைப்பொன்றை உருவாக்கும் நோக்கத்திற்காக புதிய எண்ணக்கருக்களை அல்லது வாய்ப்புக்களை உருவாக்குபவராக கண்டுபிடிப்பவராக விளங்குகின்றார். ஒரு தொழில்முயற்சியாளரின் முக்கிய பண்புகளில் பின்வருவன உள்ளடங்கும்: சுயமாக ஆரம்பித்தல், பெறுமானங்களை உருவாக்குதல், புதிய வாய்ப்புக்களை இனங்காணுதல் மற்றும் கண்டுபிடித்தல், வளங்களின் குறைவாக இருந்த போதிலும் சாதிப்பதற்கான வழிவகைகளைக் கண்டுபிடித்தல் மற்றும் இழப்புச் சாத்தியங்களை பொறுப்பேற்றல்.

***சுஜாதா, போரைத்தீவு என்ற மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய ஒரு கிராமத்தில் ஒரு ஏழை விதவையாக வாழ்ந்து வந்தாள். அவருக்கு ஒரு நாள், அப்பிரதேசத்தில் வேலை செய்யும் அரச சார்பற்ற நிறுவனமொன்றுடன் இணைந்து பிரதேச செயலத்தினால் நடாத்தப்பட்ட செயலமர்வொன்றில் பங்கேற்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அதில் அவர், உள்ளூரில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களைப் பயன்படுத்தி இனிப்புப் பண்டங்கள் செய்யும் முறையைக் கற்றுக் கொண்டார்.***

***சுஜாதா கூறுகிறார் "எனக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். எனது கணவர் என்னிடமிருந்து பிரிந்துவிட்டார். எனது கணவர் பிரிந்து சென்றதன் பின்னர், சில சிறிய வியாபாரங்களைச் செய்து வந்தேன். உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தினாலும் அரச சார்பற்ற நிறுவனமொன்றினாலும் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சியொன்றில் பங்கேற்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இப்பயிற்சியில் கற்றுக்கொண்ட அறிவைப் பயன்படுத்தி, இனிப்புப் பண்டங்கள் செய்யும் சிறிய வியாபாரமொன்றை எனது வீட்டில் ஆரம்பித்தேன். இப்போது நான் விற்பனை செய்வதற்காக இனிப்புப் பண்டங்கள், கடலை மற்றும் பனம் பாணி என்பவற்றைச் செய்கின்றேன்.***

***இந்த வியாபாரத்தை ஆரம்பித்த போது, நான் பொருளாதார ரீதியில் மிகவும் ஏழையாக இருந்தேன். ஆரம்பத்தில் உரலையும் உலக்கையையும் பயன்படுத்தி கையினால் பொருட்களைத் தயாரித்தேன். பின்னர் நாங்கள் இயந்திரங்களைப் பயன்படுத்த ஆரம்பித்ததுடன் இனிப்புப் பண்டங்களை அருகிலுள்ள கடைகளுக்கு விற்பனை செய்தோம். அதேநேரம் நான் எனது வியாபாரத்தை "லக்ஷமி சுவீட் செனறர்" என்ற பெயரில் 2010 ஆம் ஆண்டில் பதிவு செய்தேன்.***

***அவர் இப்போது வர்த்தகச் சம்மேளனத்துடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டுள்ளதுடன் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பல பெண் பிள்ளைகளுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றார்.***

### 4.2 வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களின் இயல்புகள்:



## 4.3 இலங்கையிலுள்ள வெற்றிகரமான பெண் தொழில்முயற்சியாளர்கள்

### 4.3.1 ஆடைக் கைத்தொழில் துறையிலுள்ள பெண் தொழில்முயற்சியாளர்கள்

**சந்ரா வதுராகல** 1991 ஆம் ஆண்டில் வெறுமனே 15 பெண்களுடன் கிராமத்தில் தனது வியாபாரத்தை ஆரம்பித்தார். இன்று சுமார் 1000 அங்கத்தவர்களைக் கொண்டதாக இந்த வியாபாரம் வளர்ச்சியடைந்துள்ளதுடன், நாடு முழுவதிலும் உள்ள நெசவாளர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு நிலைபேறான தொழில்களைத் தொடர்ச்சியாக உருவாக்கி வருகின்றது. “வியாபாரத்தில் பால்வேறுபாட்டுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாக நான் நினைக்கவில்லை- வியாபாரம் என்பது வியாபாரம் தான், அதன் உரிமையாளர் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் சரியே” எனவே அது ஒரு சமநிலையாக்கியாக உள்ளது.
பெண்கள் தங்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி கொள்கை மட்டத்திலான தீர்வுகளைப் பெறக்கூடிய மன்றங்களை உருவாக்குவது மிகவும் முக்கியமானதாகும் என்று அவர் கருதுகின்றார். பாராளுமன்றத்தில் பெண்களுக்குப் போதியளவு பிரதிநிதித்துவம் காணப்படவில்லை என்றும் ஒன்றுமே இல்லாத நிலையிலிருந்து ஆரம்பிக்க விரும்புகின்ற பெண்களுக்கு அடி மட்டத்தில் உதவிகளை வழங்கக் கூடிய முறையொன்று எமக்குத் தேவைப்படுகின்றது என்றும் அவர் நம்புகின்றார்.





### 4.3.2 சமையல் தொழில் துறையிலுள்ள பெண் தொழில்முயற்சியாளர்கள்

Tosakanth's Roast Paan

தஷ்யா டி சில்வா, இலங்கையில் "ரோஸ்ட் பாண்" என அழைக்கப்படும் பாரம்பரிய பாண் தொடர்பில் புதிய கண்ணோட்டமொன்றை உருவாக்கிய ஓர் உயிர்த்துடிப்புள்ள இளம் இலங்கைப் பெண்ணாவார். "ரோஸ்ட் பாண் அண்மைக்காலமாக மக்கள் மத்தியில் தொடர்ச்சியாகப் பிரபலமடைந்து வருகின்றது. அதனை நான் எனது ஆக்கத்திறன் மிக்க சேர்க்கைகள் மூலம் மாற்றியமைத்துள்ளேன்" என்று தஷ்யா கூறுகின்றார்.







*தாஷ்யா Facebook இல் தனது வியாபாரத்தைச் செய்து வருகின்றார். அவருக்கு இதுவரையில் பாரிய எண்ணிக்கையைக் கொண்ட இணையவழி வாடிக்கையாளர்கள் கிடைத்துள்ளார்கள்.*



Tashya De Silva

*“எனக்கு ஒரு மாதத்துக்கு 20 டசின் கொள்வனவுக் கட்டளைகள் கிடைத்துக் கொண்டிருந்தன.” இன்று அது ஒரு மாதத்துக்கு 40 டசின்கள் என்ற நிலைக்கு வளர்ச்சியடைந்துள்ளது.*

உண்மையான சொக்லெட் கபிலங்களின் மீதான ஒரு பெண்ணின் ஆர்வம், அவரது தனித்துவமான ஆக்கத்தின் மூலம் சொந்தமாக ஒரு தொகை கபில வகைகளை உற்பத்திசெய்யும் நிலைக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளது. அவருடைய பெயர் மொஹமட் அன்பாஸ். அவர் சொக்லெட் கபிலங்கைளத் தயாரிக்கும் treats n Stuff நிறுவனத்தின் உரிமையாளர் உள்ளார். தான் மலேசியாவில் சொக்லெட் கபிலங்களைச் சுவைத்த போது உண்மையான கபிலங்களைத் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் தனக்குத் தோன்றியதாக அவர் குறிப்பிடுகின்றார். அவர் கூறுகிறார், “நான் சொக்லெட் கபிலங்களை விரும்புகிறேன். உண்மையான சொக்லெட் கபிலங்கள் உள்ள இடங்களை இலங்கையில் தேடிப் பார்த்தேன். ஆனால் அத்தகைய இடமொன்றை என்னால் கண்டுகொள்ள முடியவில்லை.”




இப்போதுTreats N Stuff வீட்டு பேக்கர் மாறியுள்ளது. பயன்பாட்டு மென்பொருள் ஒன்றின் ஊடாக கபிலங்களுக்கான உங்கள் கொள்வனவுக் கட்டளையை அனுப்ப முடியும். அதனை இப்போது Android மற்றும் iOS சாதனங்களில் பயன்படுத்த முடியும். அதேநேரம் Facebook இல் பெருந்தொகையானவர்கள் (20,000 மேற்பட்டவர்கள்) பின்பற்றுகிறார்கள்.


## 5.0 முயற்சியாண்மையின் நன்மைகள்

### 5.1 பெண்களுக்கான பொருளாதார வலுவூட்டல் மற்றும் முயற்சியாண்மை

வறுமையைக் குறைத்து பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதன் பின்னால் உள்ள முக்கியமான உந்து சக்திகளில் ஒன்றாக பெண்களுக்கான பொருளாதார வலுவூட்டலை ஊக்குவித்தல் நோக்கப்படுகின்றது. பெண்கள், ஆண்களுக்கு மாற்றமாக, குடும்பத்தவர்களின் கல்வி மற்றும் சுகாதார பராமரிப்பு போன்ற ஆக்கபூர்வமான சமூகச் செயற்பாடுகளில் முதலீடு செய்யக்கூடியவர்களாக உள்ளனர் என்று ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். தொழில் வாய்ப்பு ஒரு உலகளாவிய சவாலாக இருப்பதன் காரணமாக, பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஒரு முக்கியமான உந்து சக்தியாகத் முயற்சியாண்மையும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனால், உலகளாவிய சனத்தொகையில் அரைப் பகுதியினராக உள்ள பெண்களை, அவர்களுடைய நாடுகளின் பொருளாதாரச் செயற்பாடுகளில் ஆக்கபூர்வமான முறையில் பங்கேற்கச் செய்வதற்காக, அவர்களுக்கு வலுவூட்டுவதும் முயற்சியாண்மையை வெற்றியளிக்கக்கூடிய தொழில் தெரிவாகக் கவனத்திற் கொள்வதும் இன்றியமையாததாகும்.

*உலகளாவிய வேலைப் படையில் 40% பெண்களாவர்*




*உலகம் முழுவதிலுமுள்ள பதிவுசெய்யபப்ட்ட சிறிய வியாபாரங்களில் 38% பெண்களுக்குச் சொந்தமானவையாகும்*

### 5.2 பெண்களின் முயற்சியாண்மைமையும் சமுதாயமும்



பெண்கள் தாம் சார்ந்துள்ள சமுதாயத்துக்கு மென்மேலும் பங்களிப்புச் செய்வதற்கு முயற்சியாண்மையினால் உதவ முடியும். பல்வேறுபட்ட சமூகச் சவால்களைத் தீர்ப்பதில் நேர்ச் சிந்தனை கொண்டவர்களாக இருப்பதற்கு உதவுவதுடன், அது கூட்டாக வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புக்களிலிருந்து பயனடைவதற்கான இயங்குதளத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது, இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களுடைய கரிசனைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தையும் அச்சவால்களை தீர்ப்பதற்கான ஆற்றலையும் வழங்குகின்றது.

பெண்களின் விருப்புரிமைகள் பறிக்கப்பட்டுள்ள சமுதாயங்களில், வியாபாரமொன்றின் ஓர் அங்கமாக இருப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பது அல்லது புத்தாக்கமொன்றை உருவாக்கக் கிடைப்பது, எல்லையற்ற சாத்தியங்களுக்கான வரவவேற்கத்தக்க ஒரு

அடையாளமாக அமைய முடியும். பெண்களைப் பொறுத்தவரையில், முயற்சியாண்மை என்பது சமூக ஏணியில் ஏறுவதற்கான, தங்களுடைய ஆற்றல்களைக் கண்டுபிடிப்பதற்கான, தங்களது உரிமைகள வலியுறுத்த ஆரம்பிப்பதற்கான, இறுதியல் தங்கள் சொந்தக் குடும்பங்களின், சமுதாயங்களின், சமூகங்களின் உள்ளே தீர்மானம் எடுக்கும் செயன்முறையின் ஒரு பங்காளராகுவதற்கான ஒரு வாய்ப்பாகும்.




## 5.3 முயற்சியாண்மை தலைமைத்துவத்தை ஊக்குவிக்கும்

முயற்சியாண்மையானது பெண்கள் எழுச்சி பெறுவதையும் செயலூக்கமிக்க தீர்மானம் எடுத்தலுக்குத் தலைமை தாங்குவதையும் சாத்தியமாக்கும். ஆசிய பசுபிக் பிராந்தியத்தைப் பொறுத்தவரையில் அதிகமான பெண்கள் ஜீவனோபாயத்திற்காகவும் தங்களது குடும்பங் களுக்கு உதவி செய்வதற்காகவுமே தொழில் முயற்சியாளர்களாக உருவாகின்றனர். இவை தவிர, பாரம்பரிய வேலைப் பரப்புக்களில் காணப்படும் தடைகள், குடும்பத்தின் அடிப்படைப் பராமரிப்பாளராக இருக்க வேண்டும் என்ற சமூக எதிர்பார்ப்பு, சிறந்த நிலைக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டிய உள்ளார்ந்த தேவை என்பன பெண்களின் முயற்சியாண்மைக்குப் பின்னாலுள்ள உழைப்பதற்குத் தூண்டுகின்ற "தேவைப்பாடுகளாக" விளங்குகின்றன. பிழைப்புக்காகவும் வளம்பெறுவதற்காகவும் தங்களது குடும்பங்களினதும் சமுதாயங்களினதும் சமூக பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் வியாபாரத்திலுள்ள பெண்கள் புத்தாக்க எண்ணக்கருக்களை வெளிக்கொண்டு வருகின்றனர்.



## 6.0 முயற்சியாண்மைக்கு தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் எவ்வாறு உதவ முடியும்

பொதுவாகத் தொழில்முயற்சியாளர்கள், குறிப்பாகப் பெண் தொழில்முயற்சியாளர்கள், தங்களது வியாபாரங்களில், முக்கியமாக தொடர்பாடல்களுடனும் வியாபார அபிவிருத்தியுடனும், நிதி, சுகாதாரம் மற்றும் கல்வி என்பவற்றுக்கான அணுகலுடனும் தொடர்புடைய விடயங்களில், தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தை ஒரு உதவிச் சாதனமாக அல்லது இயங்குதளமாகப் பயன்படுத்துவதன் மூலம் குறிப்பிடத்தக்களவில் பயனடைய முடியும். பெண்கள் தங்களது வியாபாரங்களை இணையவழி இயங்குதளங்களின் ஊடாக உலகளாவிய மட்டத்திற்கு விரிவுபடுத்த முடியும்.



### 6.1 நிதிக்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப அணுகல்

#### 6.1.1 கையடக்க வங்கிச் சேவை

முயற்சியாண்மைத் துறையில் நிதிக்கான சிறந்த அணுகலை உறுதிசெய்வதற்கான ஒரு உதவு கருவி என்ற வகையில், தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பமானது சிற்றினம் மற்றும் பேரண்டம் ஆகிய இரண்டு மட்டங்களிலும் தனது பயனுறுதித் தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. பெண் தொழில்முயற்சியாளர்கள் வியாபாரங்களைக் கொண்டு நடாத்துகின்ற போது, பொதுவான மற்றும் பாலினம் சார்ந்த சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பமானது சில முன்னுதாரணமான நிலைமாற்ற வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. கையடக்கத் தொலைபேசிகளுக்கான அணுகலில் பாரியளவிலான வளர்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து, பணத்தை வைப்புச் செய்தல், மீளப் பெறுதல், அனுப்புதல், விலைப்பட்டியல்களைச் செலுத்துதல் என்பவற்றை உள்ளடக்கியதாக வழங்கப்படும் கையடக்க வங்கிச் சேவையானது கையடக்கத் தொலைபேசிகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் நிலைமாற்றச் சேவைகளில் ஒன்றாக விளங்குகின்றது.

### 6.1.2 சமுதாய நிதிசேகரிப்பு




சமுதாய நிதிசேகரிப்பானது, பெண் தொழில்முயற்சியாளர்களின் சமூக பொருளாதாரப் பின்னணிகளையும் புவியியல் அமைவிடங்களையும் பொருட்படுத்தாது, அவர்களுக்கான ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்துள்ளது. தற்போதைய தகவல் மற்றும் இணைப்பு யுகத்தில், சமுதாய நிதியிடல் அதிகளவில் அணுகக்கூடியதாகவும் பிரபலமானதாகவும் உள்ளது. இணையவழியிலான பல்வேறுபட்ட சமுதாய நிதிசேகரிப்புத் தளங்களின் ஊடாகத் தொழில்முயற்சியாளர்கள் தமது முயற்சியாண்மை எண்ணக்கருக்களை உலகளாவிய இணையவழிச் சமுதாயத்திடம் முன்வைத்து அவ் எண்ணக்கருக்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவர்களது நிதிப் பங்களிப்புக்களைக் கோர முடியும். சமுதாய நிதிசேகரிப்பானது, உரிமையாளர்கள், உறவினர்கள் மற்றும் கூட்டுத் தொழில்முயற்சி மூலதனவாளர்கள் என்ற பாரம்பரிய வட்டத்திற்கு அப்பால் முதலீட்டாளர்கள் குழுவை விரிவுபடுத்துவதன் மூலம் முயற்சியாண்மை அதிகரிக்கக்கூடிய சாத்தியத்தைக் கொண்டுள்ளது.

### 6.2. வியாபாரத் தொடர்பாடலுக்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்



பல்வேறுபட்ட தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சாதனங்கள் மற்றும் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தீர்வுகளில், பெண் பாவனையாளர்கள் மத்தியில், குறிப்பாகத் தொழில்முயற்சியாளர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான தொடர்பாடல் சாதனமாகக் கையடக்கத் தொலைபேசி உள்ளது. உலகளாவிய மட்டத்திலும், நிலையான இணையத்தைப் பயன்படுத்தும் பெண்களை விட அதிகமான பெண்கள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்றனர். தங்களது சேவைகளை மென்மேலும் இடைத்தொடர்பு கொண்டதாகவும் தங்களுடைய வியாபார உபாயங்களை மேலும் சுறுசுறுப்பானதாகவும் பயனளிக்கக்கூடியதாகவும் மாற்றியமைப்பதில் பெண்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் உதவ முடியும். பெண் தொழில்முயற்சியாளர்கள் தங்களது சமுதாய மூலதனத்தையும் தொழில்சார் ஆற்றல்களையும், திறன்களையும் இணையம், சமூக ஊடகங்கள், வியாபார துரித அழைப்புச் சேவைகள் மற்றும் தகவல் பரிமாற்றம், வழிகாட்டல் மற்றும்

வலையமைப்பு வாய்ப்பு என்பவற்றை வழங்கக்கூடிய ஏனைய கூட்டு இயங்குதளங்கள் என்பவற்றின் ஊடாகச் சிறப்பாக அபிவிருத்தி செய்து கொள்ள முடியும்.

## 7.0 பெண்களின் வலுவூட்டலுக்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப வாய்ப்புக்கள்

**மேம்படுத்தப்பட்ட தொடர்பாடல்கள் மற்றும் தகவல்களுக்கான அணுகல்**

பெண்கள் தங்களது குடும்பத்தவர்களுடனும் நண்பர்களுடனும், வியாபார வாடிக்கையாளர்களுடனும் வழங்குநர்களுடனும் தொடர்பாடலைக் கட்டியெழுப்பிப் பேணி வருவதற்கான செலவு குறைந்த வழிமுறையொன்றை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் வழங்குகின்றது.

**பொதுச் சேவைகளுக்கான அணுகல்**

தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பமானது நேரம், தூரம் என்பவற்றைப் பொருட்படுத்தாது தகவல்களை வழங்குவதைச் சாத்தியப்படுத்துவதனால், அத்தியவசியமான பொதுச் சேவைகளை நேரடியாக, இலகுவாக அணுக முடியாதவர்களுக்கு இணையவழி அல்லது கையடக்க ஊடகங்களின் ஊடாக வழங்குவதன் மூலம் அவர்களது வாழ்வை இலகுபடுத்த முடியும்

**சமூக பொருளாதாரப் பங்கேற்புக்கான வாய்ப்புக்கள்**

இணையப் பயன்பாடு பெண்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு உதவும் சாத்தியங்கள் காணப்படுகின்றன. அண்மைக்காலத்தில் இன்ரெல் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பல நாடுகளை உள்ளடக்கிய ஆய்வு ஒன்றில், பெண்களில் சுமார் அரைவாசிப் பகுதியினர் தொழில் தேடலுக்காக இணையத்தைப் பயன்படுத்துவதாகவும் பெண் இணையப் பாவனையாளர்களில் சுமார் 30 சதவீதமானவர்கள்

**சமூக பொருளாதாரப் பங்கேற்புக்கான வாய்ப்புக்கள்**

இணையப் பயன்பாடு பெண்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு உதவும் சாத்தியங்கள் காணப்படுகின்றன. அண்மைக்காலத்தில் இன்ரெல் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பல நாடுகளை உள்ளடக்கிய ஆய்வு ஒன்றில், பெண்களில் சுமார் அரைவாசிப் பகுதியினர் தொழில் தேடலுக்காக இணையத்தைப் பயன்படுத்துவதாகவும் பெண் இணையப் பாவனையாளர்களில் சுமார் 30 சதவீதமானவர்கள் மேலதிக வருமானத்தை உழைப்பதற்கான இணையவழி வளங்களைக் கண்டுபிடிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

## 8.0 பெண்கள் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்பாடுபடுத்துவதிலுள்ள சவால்கள்

தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் சக்தியை அணுகுவதிலும் பயன்படுத்துவதிலும் பெண்கள் பின்தங்கியவர்களாகவே உள்ளனர்.

பொதுவாக நோக்குகையில், ஆண்களைவிட சுமார் 25 சதவீதம் குறைவான பெண்களே இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

டிஜிட்டல் பிளவு என்பது தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் இயங்குகின்ற பயன்பாடுகளினதும் தீர்வுகளினதும் (அதாவது, தொலைபேசி, தனிப்பட்ட கணினிகள், இணையம் மற்றம் ஏனைய டிஜிட்டல் புத்தாக்கங்ள்) கிடைக்கக்கூடியதன்மை, அணுகக்கூடியதன்மை, இயலுமான விலை, பயன்பாடு என்பவற்றின் விடயத்தில் வித்தியாசமான சனத்தொகைக் குழுக்களுக்கிடையில் நிலவும் இடைவெளியைக் குறிக்கின்றது.

இணையவழியில் பெண்களுக்கு எதிராகச் செய்யப்படும் வன்முறைகள் உலகம் முழுவதிலும் அதிகரித்து வருவதுடன் மிகப் பெரியதொரு சவாலாகவும் கருதப்படுகின்றது. இணையவழித் துன்புறுத்தல்கள், மிரட்டல்கள், பழிதீர்க்கும் ஆபாசங்கள், தொடர்ச்சியான இணையவழி அச்சுறுத்தல்கள், உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தும் இணையவழிச் செயற்பாடுகள் என்பவற்றினால் அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் உள்ள பெண்கள் ஒரே விதத்தில் பாதிக்கப்படுகின்றனர். சாதாரண மக்கள் மத்தியில் இவற்றைத் தடுப்பதற்கான அல்லது அறிவிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வு காணப்படாமை, அத்தகைய நிகழ்வுகளின் தாக்கங்களை மேலும் மோசமாக்குகின்றன. பெண்களுக்கு எதிரான இணையவழி வன்முறைகளும் குற்றங்களும், பெண்களின் தனிப்பட்ட பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தினால் இயலுமாக்கப்பட்ட தெரிவுகளைப் பயன்படுத்தி பெண்களுக்கு வலுவூட்டலை அடையும் செயன்முறைக்குத் தடையாக அமைந்துள்ளது.

இணையவழிப் பயன்பாட்டுக் கொள்கைகளினதும், தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கைகளினதும், இணையச் சட்டங்களினதும் வினைத்திறனற்ற அமுலாக்கம், தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத் தலையீடுகளையும் இணையத் தொகுதியைப் பெண்களுக்குப் பாதுகாப்பற்றதாக மாற்றியுள்ளன. இத்திட்டங்கள் பெரும்பாலும் பாலினத்துடன் தொடர்புடைய சவால்களுடன், அதாவது, பொது இணையத்தளங்களுக்கான பாதுகாப்பு அணுகல், தளங்களில் பெண்களும் பெண் பிள்ளைகளும் கௌரவமாக பிரதிநிதித்துவம் செய்யப்படுதல் என்பவற்றுடன் தொடர்பற்ற விதத்தில்

வடிவமைக்கப்பட்டுள்ளன. வினைத்திறனற்ற கொள்கை உருவாக்கத்திற்கும் அமுலாக்கத்திற்கும் பின்னாலுள்ள அடிப்படைக் காரணங்களில் சிறந்த தரவுகள் காணப்படாமையும் ஒன்றாக உள்ளது. மேலும் குறிப்பாக, தொழில்நுட்பப் பயன்பாடு தொடர்பான இற்றைப்படுத்தப்பட்டதும் பால் அடிப்படையில் பரம்பலாக்கப்பட்டதுமான தரவுகளுக்கான அணுகல் அரசாங்கங்களுக்குத் தேவைப்படுகின்றது. இந்த ஆழமான தரவுகள் அவர்களுக்கு களத்திலுள்ள நிலவரங்கைளச் சிறப்பாகப் பகுப்பாய்வு செய்து அதற்கிணங்கச் செயற்படுவதற்கு உதவியாக அமைய முடியும். சில சந்தர்ப்பங்களில்,அபிவிருத்தியடைந்த நாடுகளில் கூட, தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்கள், பழிதீர்க்கும் ஆபாசங்கள், இணையவழி மிரட்டல்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் என்பவற்றின் பின்னாலுள்ள குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்வதில் பயனுறுதியற்றவையாக உள்ளன.

பெண்களின் வலுவூட்டலுக்கு தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மூலம் கிடைக்கும் நிரூபிக்கப்பப்பட்ட பயன்கள் காணப்பட்ட போதிலும், பெண்கள் தங்களது வாழ்வைச் வளமாக்கிக் கொள்வதற்காக தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் இன்னும் சில தடைகள் காணப்படுகின்றன. இணையவழிப் பாதுகாப்பு தொடர்பிலும் பாதுகாப்பான நிலையில் இருந்தவாறு தங்களுடைய வாழ்வை வளமாக்கிக் கொள்வதற்கு தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்தும் முறைகள் தொடர்பிலும் பெண்களுக்கு ஆழமான வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும்.

## 9.0 சவால்களை வெற்றிகொள்வதில் பெண்களுக்கான இணையவழிப் பாதுகாப்பு

*நான் அவனை இணையவழியில் சந்தித்தேன்; அப்போது தான் அவன் A/L முடித்திருந்தான். அதனால் ஒவ்வொரு நாளும் என்னுடன் கதைப்பதற்கு அவனுக்கு இருந்தது. நான் பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்தவுடன், அவன் என்னுடன் மணிக் கணக்கில் இணையத்தில் அரட்டை அடிப்பான், அவன் ஒவ்வொரு நாள் இரவும் நான் தூங்கி விழும் வரை என்னுடன் தொலைபேசியில் கதைப்பான். அவன் சந்தித்த மிகவும் அழகான பெண் என என்னைப் பற்றி நினைத்திருந்தான். அவன் எனக்குப் பல பரிசுகளை அனுப்பினான். அவற்றில சில அழகான உடைகளாக இருந்தன. அவன் அனுப்பும் பரிசுகளை நான் விரும்புகிறேன் என்பதை அவனுக்கு உணர்த்துவதற்காக, நான் அவற்றை அணிந்து கொண்டு படங்கள் எடுத்து அனுப்பினேன். நாங்கள் ஒருபோதும் சந்தித்திராத போதிலும், நான் அவனைப் பற்றிய அனைத்தையும் அறிந்திருந்தேன்: அவன் தன்னுடைய புகைப்படங்கள் சிலவற்றை எனக்கு அனுப்பியிருந்தான். அவன் மிகவும் அழகானவனாக இருந்தான். சில மாதங்களின் பின்னர், தனது உற்ற நண்பர்கள் இருவருடன் என்னைச் சந்திக்க விரும்புவதாகக் கூறினான். அவன் ஒரு சிறிய அழகுசாதன ஹோட்டலில் சந்திப்போம் என்றான். நான் முதலில் தயங்கினேன். பின்னர் நான் அவனைப் பார்க்காவிட்டால் அவன் தற்கொலை செய்து கொள்வதாக என்னை அச்சுறுத்தினான். எனவே நான் உடன்பட்டேன். நான்அங்கு சென்றேன். என்னால் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் அவனுக்கு அழைப்பை ஏற்படுத்தினேன். அப்போது அவனுடைய தொலைபேசி ஒலிப்பது எனக்கு கேட்டது. நான் அவனைக் கண்டேன். நான் நினைத்ததைப் போன்று அவன் இருக்கவில்லை. அவனுக்கு வயது 43 ஆக இருந்தது. பெண் பிள்ளைகளை மிரட்டி அவர்களைக் கடத்தி அவர்களுடைய குடும்பங்களிடமிருந்து பெருந் தொகைப் பணத்தை கப்பமாகக் கேட்கின்ற ஒழுங்குபடுத்தப்பட்ட குழுவொன்றின் அங்கத்தவனாக அவன் இருந்தான். எங்கள் சந்திப்பு சந்தேகத்திற்கு இடமானதாக இருந்ததனால் அந்த ஹோட்டலில் இருந்த ஆட்கள் 119 மூலம் பொலிசாருக்கு அறிவித்ததனால் நான் அதிஷ்டவசமாகக் காப்பாற்றப்பட்டேன்.*

## 9.1 இணையவெளித் தொல்லை நிகழுமிடத்து உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

இணையவெளித் தொல்லையானது ஒரு
குற்றவியல் குற்றமாகும். இணையவெளித்
தொல்லைக் குற்றத்தைச் செய்யும்
எந்தவொரு ஆளுக்கும் இரண்டு
வருடங்கள் வரையான சிறைத் தண்டனை,
தண்டம் அல்லது அவை இரண்டும்
விதிக்கப்பட முடியும்

TechCERT – A division of LK Domain registry
Address: 545/4, De Soysa Road, Molpe, Moratuwa
Tel: 011- 4216062
Hotline: +94 114 462 562
Email: help@techcert.lk
Web: www.techcert.lk

Or

Sri Lanka CERT/CC
Address: Room 4-112, BMICH, Bauddhaloka Mawatha, Colombo 7
Tel: 0112-691-692 / 0112-691-064 / 0112-679-888
Email: slcert@cert.gov.lk

இணையவழிச் சமுதாயத்தில் யாருடன் இடைத்தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்பதில் அனைத்துப் பெண்களும் விழிப்புணர்வுடனும் எச்சரிக்கையாகவும் இருப்பது அவசியமாகும்

பொது மக்களால் அணுகக்கூடியதாக உங்களால் இணையவழியில் பதிவேற்றப்படுபவை தொடர்பில் எப்போதும் எச்சரிக்கை உணர்வுடனும் உணர்திறனுடனும் இருங்கள்

உங்கள் இலத்திரனியல் சாதனங்களுக்குத் தேவையான பாதுகாப்பு மென்பொருட்கள் அனைத்தையும் கொள்வனவு செய்யுங்கள். அவற்றை இற்றைப்படுத்தி வைத்திருங்கள், அவற்றை முறையாகப் பயன்படுத்துங்கள்

இணையவழியில் சந்தித்த ஒருவரை நேரடியாகத் தனிப்பட்ட முறையில் சந்திக்க வேண்டாம். ஆட்களின் உண்மைத் தன்மையை எப்போதும் வெளித் தோற்றத்தின் மூலம் அறிய முடியாது என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

உங்கள் கையடக்கச் சாதனங்களின் சிறப்பம்ங்களை மீளாய்வு செய்யுங்கள். உங்கள் கையடக்கத் தொழில்நுட்பம் எவ்வாறு உங்களை கொடூரமானவர்களுக்கு இரையாக்க முடியும் என்பதை அறிந்துகொள்ளுங்கள் (GPS கண்காணிப்பு)



## 10.0 பெண்களுக்கு வசதி ஏற்பாடுகள் செய்து கொடுப்பதற்கான கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தற் சூழல்

### 10.1 கொள்கை இலக்குகளை முன்னுரிமைப்படுத்துதலும் உருவாக்குதலும்

பெண்களின் முயற்சியாண்மைக்கான பயனுறுதி வாய்ந்த கொள்கை இலக்குகளை உருவாக்குவதற்காக, கொள்கை வகுப்பாளர்கள், முயற்சியாண்மை தொடர்பான நாட்டின் தேசிய உபாயங்களையும், பெண்களின் நிலையையும், தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்தியையும் சந்தைத் தாராளமயமாக்கல் செயன்முறையையும் பகுப்பாய்வு செய்வது அவசியமாகும். பெண்களின் முயற்சியாண்மைத் தேவைகள் நாட்டின் தேசிய அபிவிருத்திக் கொள்கை, திட்டமிடற் செயன்முறைமுறை என்பவற்றினுள் உள்வாங்கப்பட வேண்டும்.



**10.2 பால்-நட்புறவான பொதுக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு**

ESCAP தனது ஆசிய-பசுபிக் பிராந்தியத்திலுள்ள பெண்களின் முயற்சியாண்மை தொடர்பான பல நாடுகளை உள்ளடக்கிய ஆய்வில், பாலின நட்புறவான, நியாயமான, நிறைவான கொள்கை மற்றும ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பொன்றை உறுதிப்படுத்துவதற்காகப் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்கின்றது:



» **அரசாங்கத்தின் அனுசரணையுடான நிதி நிகழ்ச்சிகளுக்கான சம அணுகலை உறுதிப்படுத்துகின்ற பாலினத்துக்கு ஏற்பத் துலங்கக்கூடிய வரவு செலவுத் திட்டம் தயாரித்தலுக்கான இலக்குகளுடன் கூடிய செயற்பாட்டுத் திட்டங்களை உருவாக்குதல்.**

» பெண் தொழில்முயற்சியாளர்களை இலக்காகக் கொண்டுள்ள கடனுதவித் திட்டங்களின் காணப்படும் அளவு, நிதியிடல் மட்டங்கள், அணுகக்கூடிய தன்மை என்பவற்றை பாலினத்திற்கு ஏற்பத் துலங்கக்கூடிய வரவு செலவுத் திட்டத் திட்டமிடலுக்கு இணங்க மதிப்பீடு செய்து சீராக்கம் செய்தல்.




» **தொழிற்பாட்டு மூலதனம், நவீனமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகள், வியாபாரக் கையகப்படுத்தல் மற்றும் விரிவாக்கங்கள் என்பவற்றுக்கான நிதிகள் அடங்கலாக வியாபார அபிவிருத்தியின் அனைத்துக் கட்டங்களிலும் மீள்முதலீட்டுக்கான நிதி கிடைக்கக்கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்துதல்.**

» பெற்றுக்கொள்ள முடியுமான கடன் அனைத்தையும் பற்றிய தகலவ்களையும் அவற்றுக்கான அணுகல் வசதியையும் வழங்கக்கூடிய "ஒரே கூரை"யின் கீழான கடன் நிலையங்களை உருவாக்குதல்.



» **பெண் கடன் விண்ணப்பதாரர்கள் நீதியாகவும் நியாயமாகவும் நடாத்தப்படுவதற்கான அபிவிருத்தி நியமங்களை உருவாக்குவதற்காக நிதி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல்.**

» கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதியியல் உற்பத்திகளையும் உதவி வாய்ப்புக்களையும் சீரானதும் சமநிலையானதுமான புவியியல் தழுவல் அளவில், பெண்களால் அணுக முடியுமான அஞ்சல் அலுவலகங்கள், வானொலி, இணையவழி நுழைவாயில்கள் மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற பல்வேறுபட்ட அலைவரிசைகளின் ஊடாகப் பல்வேறு ஊடக வடிவங்களில் பிரசாரம் செய்வதன் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் ஊக்குவிப்பதற்கான பொறிமுறைகளை உருவாக்குதல்.



» **பெண்களின் முயற்சியாண்மைக்கு அதிகரித்த நிதிகளை வழங்கும் நிதி நிறுவனங்களுக்கான வரி ஊக்குவிப்புக்களை உருவாக்குதல்.**

» **பெண்கள் கடன்களைச் சுயாதீனமாகவன்றி கூட்டாக எடுப்பதற்கு நிர்ப்பந்திக்கின்ற இணைக் கையொப்பத் தேவைப்பாடுகளையும் ஏனைய ஒழுங்குவிதிகளையும் நீக்குதல்.**

» **கூட்டு உத்தரவாதத் திட்டங்களுக்கான வசதி ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து, பூச்சிய-ஈட்டுக் கடன்களை ஊக்குவித்தலும் ஆபரணங்கள் மற்றும் ஏனைய தனிப்பட்ட பெறுமதி வாய்ந்த பொருட்கள் போன்ற சொத்துக்களை உள்ளடக்கக்கூடிய வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஈட்டுப்பொருட்களின் வகுதிகளை விரிவுபடுத்துதலும்**

**11.0 உசாத்துணைகள்**


Attygalle, K et al (eds). (2014). Female Entrepreneurship and the Role of Business Development Service in promoting small and medium women entrepreneurs in Sri Lanka. Sri Lanka: The institute of Policy studies Sri Lanka and Oxfam international Sri Lanka.

Shifani (2015). 8 Awesome Business by Women. [online]. [Accessed 28 June 2016]. Available from: <https://www.yamu.lk/blog/womens-day-special/>.

Waidyaratne, N (2016). Tosakanth Roast Paan [online]. Available from: <http://www.life.lk/article/30/food/15533/Tosakanth-Roast-Paan>. [Accessed 15 July 2016].

Fazali, R (2013). Treat yourself!. DailyFT, 27 April.

Steyn,J. Paul van Belle,J. and Mansilla,E. (2011). ICTs for Global Development and Sustainability: Practice and Applications.Hershey: Information Science Reference. Available from: <https://books.google.lk/books?id=m4-lRdLqryoC>. [Accessed 29 July 2016].

Sandys, E (2005). Gender equality and empowerment of women through ICT. 444: UNITED NATIONS Division for the Advancement of Women Department of Economic and Social Affairs. Available from: <http://www.un.org/womenwatch/daw/public/w2000-09.05-ict-e.pdf>. [Accessed 26 July 2016].

Asian Development Bank (2015). Country Gender Assessment Sri Lanka An Update. Manila: Asian Development Bank.

Zainudeen, A., Ibal,T. and Samarajiva,R. (2010, June). Who's got the phone? Gender and the use of the telephone at the bottom of the pyramid. (12/4). Available from: <http://lirneasia.net/wp-content/uploads/2007/03/whos-got-the-phone-gender-BOP-v1.8_web.pdf>. Accessed: 24 July 2016